# நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 10-5 - கண்ணன் கழலிணை
## (ஆழ்வார் எம்பெருமானிடத்து பக்தி உடையார் செய்ய வேண்டிய செயல்களை எல்லாம் சுருங்கச் சொல்லி, பரோபதேசத்தை நிறைவு படுத்தல்)

3711 * கண்ணன் கழலிணை *
நண்ணும் மனம் உடையீர்! **
எண்ணும் திருநாமம் *
திண்ணம் நாரணமே 1

3712 நாரணன் எம்மான் *
பாரணங்காளன் **
வாரணம் தொலைத்த *
காரணன் தானே 2

3713 தானே உலகெல்லாம் *
தானே படைத்திடந்து **
தானே உண்டுமிழ்ந்து *
தானே ஆள்வானே 3

3714 ஆள்வான் ஆழி நீர் *
கோள்வாய் அரவணையான் **
தாள்வாய் மலர் இட்டு *
நாள்வாய் நாடீரே 4

3715 நாடீர் நாள்தோறும் *
வாடாமலர் கொண்டு **
பாடீர் அவன் நாமம் *
வீடே பெறலாமே 5

3716 * மேயான் வேங்கடம் *
காயாமலர் வண்ணன் **
பேயார் முலையுண்ட *
வாயான் மாதவனே 6

3717 மாதவன் என்றென்று *
ஓத வல்லீரேல் **
தீதொன்றும் அடையா *
ஏதம் சாராவே 7

3718 சாரா ஏதங்கள் *
நீரார் முகில்வண்ணன் **

பேர் ஆர் ஓதுவார் *
ஆரார் அமரரே 8

3719 அமரர்க்கு அரியானை *
தமர்கட்கு எளியானை **
அமரத் தொழுவார்கட்கு *
அமரா வினைகளே 9

3720 வினை வல்லிருள் என்னும் *
முனைகள் வெருவிப் போம் **
சுனை நன்மலர் இட்டு *
நினைமின் நெடியானே 10

3721 * நெடியான் அருள் சூடும் *
படியான் சடகோபன் **
நொடி ஆயிரத்து இப்பத்து *
அடியார்க்கு அருள் பேறே 11

**அடிவரவு:** கண்ணன் நாரணன் தானே ஆள்வன் நாடீர் மேயான் மாதவன்
சாரா அமரர் வினை நெடியான் அருள்